சுதேச மருத்துவத்துறை அமைசசு

# ஹோமியோபதி மருத்துவ சபை

# ஆண்டறிக்கை

# 2013

Homoeopathic Medical Council

Samuel Hahnemann

Sri Lanka

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பொழிப்பு | 01 |
| 2. | அறிமுகம் | 02 |
| 3. | ஹோமியோபதி மருத்துவ சபை | 03 |
| 4. | பின்னணி | 04 |
| 5. | மருத்துவ சபையின் நோக்கம் | 07 |
| 6. | மருத்துவ சபையின் அதிகாரங்கள் | 08 |
| 7. | மருத்துவசபையின் உறுப்பாண்மையும் பதவிக்காலமும் | 10 |
| 8. | கூட்டிணைக்கப்பட்ட விபரங்கள் | 11 |
| 9. | மருத்துவ சபையின் செயற்பாடுகள் | 12 |
| 10. | தரவுகளும் இற்றைவரைப்படுத்தப்பட்ட விபரங்களும் | 14 |
| 11. | கணக்காய்வு அறிக்கை | 19 |
| 12 | ஆசிகள் | 20 |

# 01. பொழிப்பு

ஹோமியோபதி மருத்துவ சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை இவ்வாறு சமர்ப்பிப்பதுடன் இந்த நிருவனத்தின் ஆண்டின் மொத்த செயற்பாடுகள் இதன் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஹோமியோபதி மருத்துவ சபையின் நோக்கு, செயற்பணி, குறிக்கோள், திட்டம். இலக்கு நோக்கி அண்மிப்பதற்கு எடுத்த திரண்ட செயற்பாடு மற்றும் அது தொடர்பிலான விளக்கங்கள் இதன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஹோமியோபதி மருத்துவ முறையை தேசிய சுகாதார சேவை வரை மேம்படுத்துதல் அதன் நோக்கு என கொண்டுள்ள ஹோமியோபதி மருத்துவ சபைக்கு அதன் நோக்கத்தை எய்துவதற்கு அதிமேதகைய சனாதிபதியினதும் மாண்புமிகு அமைச்சரினதும் மாண்புமிகு பிரதி அமைச்சரினதும் உட்பட சகல அமைச்சர்களினதும் வழிகாட்டல் எமக்கு முக்கியமாகும்.

2013 ஆம் ஆண்டு முடிவடையும் போது ஹோமியோபதி மருத்துவ சபையொன்றை நியமிக்க முடியாது போனமையினால் இந்த ஆண்டும் கடந்த ஆண்டைப் போன்று சபைக்குப் பதிலாக இதன் பணிகளை ஹோமியோபதி இடைக்கால குழுவினாலே மேற்கொள்ளப்பட்டது. 3 மருத்துவர்களைக் கொண்ட தொழில்நுட்பக் குழுவின் ஒத்துழைப்பும் சிபாரிசுகளும் இதற்குக் கிடைத்தன. இந்த ஆண்டிற்குள் இடைக்கால குழு மருத்துவ சபையின் வழமையான பணிகளை மேற்கொள்ளுவதோடு மட்டுமன்றி அடிப்படையாக இரு துறைகள் தொடர்பில் அதனது செயலாற்றுகையை மேற்கொண்டுள்ளன. அதில் ஒன்று மருத்துவ சபையின் ஆளணி ஆட்சேர்ப்பின் மூலம் இதன் சேவைகள் போதுமானளவு மற்றும் நிலையான தன்மைக்கு கொண்டு வருவதாகும். இதற்கமைவாக இருவர் அலுவலக உதவியாளர் பதவிக்கும் இருவர் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். இடைக்கால குழு நியமிக்கப்பட்டதன் பின்னர் முதலில் ஹோமியோபதி மருத்துவ தொழில்சார்பாளர்களை பதிவு செய்வதற்கு தொடர்புபடுத்துதல் மற்றைய துறையாக குறிப்பிடலாம். இதற்கமைவாக இந்த ஆண்டு 5 ஹோமியோபதி பட்டதாரி மருத்துவர்களுக்கு பதிவுகளை வழங்கியதுடன் சபையினால் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துக் கொள்வதற்கு முடியுமாயின. அத்தோடு இந்த ஆண்டு முடிவடையும்போது சட்டத்தின் 27(1)C பிரிவின் கீழ் மருத்துவ தொழில்சார்பாளர்களை பதிவு செய்வதற்கு நேர்முகப் பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஹோமியோபதி மருத்துவ சபையின் மொத்தப் பணிகளையும் கண்காணித்தல் இதற்குத் தேவையான திறமுறைகளை அறிமுகப்படுத்துதல் சுதேச மருத்துவ துறை அமைச்சினால் ஆகும். இந்த மருத்துவ முறையை மேம்படுத்துவதற்கு தேவையான பௌதிக மற்றும் மனித வள அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு ஹோமியோபதி மருத்துவ சபையை நேரொத்த அமைச்சாக சுதேச மருத்துவத் துறை அமைச்சின் நோக்கங்களை எய்துகொள்வதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்வது இந்த ஆண்டறிக்கையை வெளியிடுவதன் இறுதி எதிர்பார்ப்பாகும்.

# 02. அறிமுகம்

" சமமானவைகளால் சமமானவைகள் அழிந்து விடும்" என்னும் இயற்கைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட மருத்துவ முறையாக ஹோமியோபதி மருத்துவ முறையை குறிப்பிடலாம். 18 வது நூற்றாண்டில் ஜெர்மன் நாட்டின் விஞ்ஞானியான கிருஷ்டியன் பெற்றிக் சேமுவேல் ஹானிமான் என்னும் மருத்துவர் இந்த மருத்துவ முறையின் ஆரம்பகர்த்தாவாவார் மேலும் இவர் இந்த மருத்துவ முறையை விரிவுபடுத்துவதற்கும் பாரிய பங்களிப்பைச் செய்தவராவார். இன்றைய தினம் ஹோமியோபதி மருத்துவ முறை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ முறையாக உலகம் பூராவுமுள்ள பல நாடுகள் பயன் படுத்துகின்றன. உதாரணமாக இந்திய அரசாங்கம் ஹோமியோபதி மருத்துவ முறையை தேசிய சுகாதார சேவையுடன் இணைத்து நாடு பூராவுமுள்ள ஹோமியோபதி சிகிச்சைகள் மற்றும் மருத்துவமனைகள் ஊடாக ஹோமியோபதி சிகிச்சைகளை பொதுமக்களுக்காக வழங்குகின்றது.

1970 ஆண்டின் 07 இலக்க சட்டத்தின் 1 வது பகுதியின் 2 வது பிரிவின் 1 உப பிரிவின் பிரகாரம் இலங்கை ஹோமியோபதி மருத்துவ சபை நிறுவப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி மருத்துவர்களுக்கிடையே ஏழு பேர் ஹோமியோபதி மருத்தவ சபைக்கு தெரிவு செய்யப்படுவர். (தற்பொழுதுஹோமியோபதி மருத்தவ சபை கலைக்கப்பட்டுள்ளதுடன் இதன் நடவடிக்கைகள் இடைக்காலக் குழுவினால் நிருவகிக்கப்படுகின்றது) பதிவாளர் ஹோமியோபதி மருத்துவ சபையின் செயலாளராவார்.

இந்த சபையின் ஊடாக நெறிப்படுத்தப்படுகின்ற 07 அரசாங்க ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் தெஹிவளை, பரகடுவ, மொணறாகலை, பாலமுனை, மாத்தளை, குருநாகல், மற்றும் தோலங்கமுவ என்னும் இடங்களில் தாபிக்கப்பட்டுள்ளன.

# 03. ஹோமியோபதி மருத்துவ சபை

## நோக்கு

“ஹோமியோபதி மருத்துவ முறையை தேசிய சுகாதார சேவை வரை மேம்படுத்துதல்”

## செயற்பணி

“ஹோமியோபதி மருத்துவ முறையின் மூலம் மனித மற்றும் பௌதிக வளங்களை விருத்தி செய்வது தொடர்பில் முறையான கொள்கைகளை வகுத்தமைத்து இதை பொது மக்களுக்கிடையே பிரபல்யப்படுத்துவதும் கட்டியெழுப்புவதும் அபிவிருத்தி செய்வதுமாகும்.”

## குறிக்கோள்

1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவ துறையின் தொழில்சார் கற்கை மற்றும் சுகாதார சேவைகளின் பண்புகளை அபிவிருத்தி செய்வதும் அறிவு, ஆற்றல் மற்றும் அனுபவத்தைக் கொண்ட தொழில்சார்பாளர்கள் மூலம் நோயாளிகளுக்கு ஆரோக்கிய தன்மையை நிலைநாட்டுவதும் ஆரோக்கியமான மக்களின் ஆரோக்கிய தன்மையை பேணுவதும் தொழில்சார் சட்டரீதியான ஏற்பாடுகளை வழங்குவதன் மூலம் தொழில்சார் மதிப்பையும் பண்பையும் பேணுவதாகும்.

# 04. பின்னணி

ஹோமியோபதி மருத்துவ சபை பிரதானமாக தொழில்சார் சபையொன்றாகும். முதலில் ஹோமியோபதி மருத்துவ சபையின் உறுப்பினர்கள் ஹோமியோபதி சட்டத்தின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான மாண்புமிகு அமைச்சரினால் நியமிக்கப்படுவர். பின்னர் மருத்துவசபைக்கான உறுப்பினர்கள் பதிவுசெய்யப்பட்ட ஹோமியோபதி மருத்துவர் களுகிடையே நடத்தப்படுகின்ற வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவர். மாண்புமிகு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் சிபாரிசும் அமைச்சரினால் பிரகடனப்படுத்துகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்புடையதாக ஹோமியோபதி மருத்துவசபையின் பணிகளும் தத்துவங்களும் நடைமுறைப்படுத்துதல் வேண்டும். ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக ஒழுங்குவிதிகளை வகுத்தமைப்பதற்கு ஹோமியோபதி மருத்துவசபைக்கு அதிகாரமுண்டு. இந்த ஒழுங்குவிதிகளை ஹோமியோபதி சட்டத்தின் கட்டளைகளுக்கு ஏற்புடையதாக மாண்புமிகு அமைச்சரினால் பிரகடனப்படுத்துதல் வேண்டும்.

## சட்டமும் ஒழுங்குவிதிகளும்

ஹோமியோபதி மருத்துவ முறையானது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 40 ஆண்டு காலமாகியும், ஹோமியோபதி மருத்துவசபை தாபிக்கப்பட்டு 30 வருடங்களுக்கும் கூடிதலான காலமாகியும் துரதிஷ்டவசமாக ஹோமியோபதி சட்டத்தை செயல்வலுப் படுத்துவதற்கு தேவையான ஒழுங்குவிதிகளில் இற்றைவரை சிறிய அளவிலேயே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமை ஹோமியோபதி மருத்துவ முறையின் மேம்பாட்டுக்கு தடையாகவிருப்பதோடு, சட்டத்தை தாண்டிச் சென்று மோசடிகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களும் உள்ளன. அத்துடன், இதன் காரணத்தினால் மருத்தவ சபைக்கு அதனது நோக்கத்தை எய்துவதற்கு முடியாதுள்ளதுடன் முறையாக செயல்வலுப்படுத்துவதற்கும் முடியாதுள்ளது.

## இற்றைவரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள துணைச்சட்டங்கள்

1. மருத்துவ சபைச் சட்டம் - 1981

2. ஹோமியோபதி ஒழுங்குவிதிகள் - 1980 - மருத்துவ தொழில்சார்பாளர்களின் ஒழுங்குவிதிகளும் ஹோமியோபதி மருந்து இறக்குமதியும்.

3. ஹோமியோபதி சபைச் சட்டம் - 1983

4. ஹோமியோபதி மருத்துவசபை தேர்தல் ஒழுங்குவிதிகள் - 1998

## ஹோமியோபதி மருத்துவசபைத் தாபித்தல்

முதலாவதாக ஹோமியோபதி மருத்துவ சபை 1979 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சரினால் சட்டத்தின் கட்டளைகளுக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவசபைக்கு உறுப்பினர்களை நியமித்து ஹோமியோபதி சட்டம் செயல்வலுப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் மருத்துவசபையின் உறுப்பினர்கள் ஹோமியோபதி சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவ தொழில் சார்பாளர்களுக்கிடையே வாக்கெடுப்பொன்றை நடாத்தி தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மூன்றாவதாக ஹோமியோபதி மருத்துவசபைச் சட்டத்தின் கட்டளைகளுக்கு அமைவாக மருத்துவசபை உறுப்பினர்களின் பதவிக்காலத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

## ஹோமியோபதி மருத்துவ சபையின் உறுப்பினர்கள்

* முதலின் ஹோமியோபதி மருத்துவசபை உறுப்பினர்கள் மாண்புமிகு அமைச்சரினால் சட்டத்தின் கட்டளைகளுக்கு அமைவாக நியமிக்கப்பட்டனர். (1979 - 1989)

* அதன் பின்னர் 10 வருட காலமாக மருத்துவசபை வாக்கெடுப்பு ஒழுங்குவிதிகள் வகுத்தமைக்காததன் காரணத்தினால் மருத்துவ சபை செயலிழந்து காணப்பட்டது. (1989 - 1998)

* வாக்கெடுப்பொன்றை நடாத்தி 5 வருட காலத்திற்கு 1998 செப்ரெம்பர் மாதம் மருத்துவசபைக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (1998 - 2003)

* மீண்டும் 3 வருட காலம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் மாற்றம் மற்றும் ஏனைய சட்டரீதியான விடயங்கள் காரணத்தினால் மருத்துவசபை செயலிழந்து காணப்பட்டது. (2003 - 2006)

* மூன்றாவது மருத்துவசபை 2006 ஆம் ஆண்டு வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டதுடன் இது 2009 யூலை மாதம் வரை செயற்பட்டது. மாண்புமிகு அமைச்சரின் 2009 ஒக்ரோபர் மாதம் மருத்துவசபை உறுப்பினர்களை பதவிகளிலிருந்து அகற்றி இந்தப் பதவிகளுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். (உரிய வர்த்தமானி அறிவித்தல் இணைக்கப்பட்டுள்ளது)

* மாண்புமிகு அமைச்சரின் 2009-10-29 ஆம் திகதியிடப்பட்டதும் 1625 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக கலைக்கப்பட்ட மருத்துவ சபையின் மீதி இரண்டு வருடங்களுக்கு மருத்து சபையொன்று நியமிக்கப்பட்டது. இந்த மருத்துவ சபையின் காலப்பகுதி முடிவடைந்தவுடன் 2011 சனவரி 31 ஆம் திகதியன்று இந்த சபை இல்லாதொழிக்கப்பட்டது.

* இதிலிருந்து 2011 யூன் 16 ஆம் திகதிவரை மருத்துவ சபை செயற்படவில்லை.

* 2011 யூன் 16 ஆம் திகதியன்று சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் மாண்புமிகு அமைச்சரினால் மருத்துவ சபையின் பணிகளை நடாத்திச் செல்வதற்கு இடைக்கால குழுவொன்று நியமிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரைக்கும் மருத்துவ சபைக்குரிய பணிகள் இந்த இடைக்கால நிருவாகக் குழுவினாலேயே. நடைமுறைப்படுத்தப்படுகின்றன

## 5. மருத்துவ சபையின் நோக்கம்

ஹோமியோபதி சட்டத்தின் 22 வது பிரிவின் கீழ் ஹோமியோபதி மருத்துவ சபையின் நோக்கம் பின்வருமாறு.

1. ஹோமியோபதி மருத்துவர்களின் பதிவும் பதிவை தற்காலிகமாக நிறுத்துதலும்.

2. ஹோமியோபதி மருத்துவ முறையின் நியதிகளையும் தொழில்சார் ஒழுக்க விதிகளையும் பேணுதல்.

3. ஹோமியோபதி மருத்துவ முறையை விரிவுபடுத்தலும், ஊக்கப்படுத்தலும், ஹோமியோபதி மருத்துவக் கற்கையை மேம்படுத்துவதும்

4. ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் நிறுவனங்களைத் தாபித்தலும் சட்ட ரீதியான ஏற்றுக்கொள்ளலும்.

5. ஹோமியோபதி மருந்துகள் மற்றும் திரவியங்கள் உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், நிருவகித்தல், மற்றும் ஒழுங்குறுத்துதல்.

6. ஹோமியோபதி மருத்துவ முறை மற்றும் பொதுச் சுகாதாரம் தொடர்பில் விழிப்பூட்டலுக்கான புத்தகங்கள், சஞ்சிகைகள் வெளியிடல்.

7. ஹோமியோபதி சட்டத்திற்கு ஏற்புடையதாக சட்டங்களையும் ஒழுந்ந விதிக் கோவையையும் பிரகடனப்படுத்துதல்.

8. ஹோமியோபதி சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்புடையதாக தொழில்சார் சபையாக ஹோமியோபதி தொழில்சார்பாளர்களினதும் உறுப்பினர்களினதும் பொறுப்புகள் தொடர்பில் மாண்புமிகு அமைச்சருக்கு விளக்கமளித்தல்.

## 06. மருத்துவ சபைக்குரிய அதிகாரங்கள்

ஹோமியோபதி சட்டத்தின் 23 ஆவது கட்டளையின் பிரகாரம் மருத்துவ சபைக்குரிய அதிகாரங்கள் பின்வருமாறு

1. ஹோமியோபதி மருத்துவ தொழில்சார்பாளர்களை பதிவு செய்தல்.

2. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியின் அங்கீகரிப்புகளை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது.

3. ஏற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவக் கல்லூரிக்கான பாடநெறிகளின், பாடவிதானங்கள் மற்றும் தொகுக்கப்பட்ட பாடநெறிகளுக்கான பாடவிதானங்களை பணித்தல்.

4. ஏற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவக் கல்லூரியில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு பரீட்சைகளை நடாத்தி பட்டம் அல்லது டிப்ளோமா சான்றிதழ்களை வழங்குதல்.

5. பரீட்சைக் கட்டணம் உள்ளடங்கலாக கட்டணங்களை விதித்தலும் அறிவிடுதலும்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவக் கல்லூரியின் தரம் மற்றும் பண்புகளின் வளர்ச்சியை பரிசீலித்தல், அவதானித்தல், கற்கைத் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

7. மருத்துவ சபையினால் பிரகடனப்படுத்தப்படுகின்ற பரீட்சைகளை நடாத்துவதற்கு பொதுப் பட்டியலில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்களுடன் வெளி பரீட்சகர்களையும் நியமித்தல்.

8. சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற சிபாரிசுகள் தேர்வுமுறைக்கு அமைவாக நடவடிக்கையை மேற்கொள்ளாத மருத்துவக் கல்லூரிகளை தடை செய்வதல் அல்லது அங்கீகரிப்புகளை இடைநிறுத்துதல் (இவ்வாறு செய்வதற்கு முன்னர் நிறுவன நிருவாக சபையிடம் தவறுகளை சீர்செய்து கொள்வதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்து கொள்வதற்கு இடமளித்தல் வேண்டும்)

9. ஹோமியோபதி ஆராய்ச்சி நிறுவனத்தை தாபித்தல். பட்டப்பின்படிப்பு பாடநெறியை ஒழுங்கு செய்தல், ஹோமியோபதி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல்.

10. ஹோமியோபதி சஞ்சிகைகளை வெளியிடுதல்.

11. சட்ட எதிர்பார்ப்புகளையும் மருத்துவ சபையின் நோக்கங்களையும் எய்துகொள்வதற்கு ஹோமியோபதி நிதியத்தின் நிதியை பயன்படுத்துதல்.

12. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களையும் ஹோமியோபதி மருத்துவ முறையின் வளர்ச்சிக்குரியதான மருத்துவ சபையின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுதல்.

13. மருத்துவ சபையின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கும் சட்டத்தின் ஏற்பாடுகளை செயல்வலுப்படுத்துவதற்கும் ஒழுங்குவிதிகளை ஆக்கி மாண்புமிகு அமைச்சரினால் தேவையான ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்தில் அங்கீகரிப்பித்துக் கொண்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும்.

## 07. மருத்துவசபையின் உறுப்பாண்மையும் பதவிக்காலமும்

ஹோமியோபதி மருத்துவசபையின் உறுப்பாண்மையானது தலைவர் உட்பட ஏழு (07) பேரைக் கொண்டதாகும். அவர்கள் பொது பட்டியலில் பெயர் உள்ள பதிவு செய்யப்பட்டுள்ள ஹோமியோபதி மருத்துவ தொழில்சார்பாளர்களின் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படல் வேண்டும். மருத்துவ சபையின் செயலாளர் / பதிவாளர் மருத்துவசபையினால் நியமிக்கப்படுவார். மருத்துவ சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கிடையே மாண்புமிகு அமைச்சரினால் மருத்துவ சபையின் தலைவர் நியமிக்கப்படுவார்.

1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மருத்துவ சபை சட்டரீதியாக செயல்வலுப்படுத்தப்படுவதாவது இதை மாண்புமிகு அமைச்சரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னரேயாகும். மருத்துவ சபைக்கான உறுப்பினர்கள் ஐந்து (05) வருட காலத்திற்கே தெரிவு செய்யப்படுவர்.

## 08. **கூட்டிணைக்கப்பட்ட விபரங்கள்**

நிறுவனத்தின் பெயர் : ஹோமியோபதி மருத்துவசபை

முகவரி : இல.94, செல்டன் ஜயசிங்க மாவத்தை,வெலிசற,றாகம.

தொ.பே.இல .: 011-2958175

மின்னஞ்சல் : homosri.mcouncil@gmail.com

கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் நிலை : 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் 23 மற்றும் 22 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அதிகாரங்கள் மற்றும் குறிக்கோளுடன் ஹோமியோபதி மருத்துவ சபை தாபிக்கப்பட்டுள்ளது.

**நிருவாகக் கட்டமைப்பு** : செயலாளர் / பதிவாளர்

முகாமைத்துவ உதவியாளர்

அலுவலக உதவியாளர்

**வங்கியாளர்கள்** : இலங்கை வங்கி - தப்ரோபேன் கிளை, கொழுப்பு 01.

கொமர்சல் வங்கி, ஜாஎல கிளை.

## 09. செயற்பாட்டுத் திட்டம் - 2013

**நோக்கம் 01**

ஹோமியோபதி மருத்துவ முறைக்கு முறையான அங்கீகாரத்தை வழங்குதல்.

**திறமுறை**

1. அமைச்சின் பெயர் ஹோமியோபதியும் உள்ளடங்கலாக மாற்றுதல்.
2. அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.

**நோக்கம் 02**

ஹோமியோபதி சட்டத்தின் கட்டளைகளை நடைமுறைப்படுத்தி ஹோமியோபதி மருத்துவ சபையை செயல்வலுப்படுத்துதல்.

**திறமுறை**

ஒழுங்கு விதிகளை வகுத்தமைத்து பிரகடனப்படுத்துதல்.

**நோக்கம் 03**

ஹோமியோபதி பொது சுகாதார சேவையொன்றை நிறுவுதல்.

**திறமுறை**

1. சட்டம் மற்றும் ஒழுங்கை வகுத்தமைத்தலும் அங்கீகரித்தலும்.
2. நிருவாகக் கட்டமைப்பை இனங்காணுதல்.
3. நியமனத்தை வழங்கும் செயற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்ளல்.
4. நிதி ஏற்பாடுகளை குறித்தொதுக்கிக் கொள்ளல்.

**நோக்கம் 04**

ஹோமியோபதி மருத்துவ தொழில்சார்பாளர்களையும் மருந்தாளர்களையும் உருவாக்குதலும் அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்தலும்.

**திறமுறை**

1. ஒழுங்குவிதிகளை பிரகடனப்படுத்துதல்.
2. சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமாக ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியை உருவாக்குதல்.

**நோக்கம் 05**

ஹோமியோபதி மருந்துகள் மற்றும் உற்பத்திகள் தொடர்பிலான சந்தைப்படுத்தல் மற்றும் இலகுவில் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

**திறமுறை**

1. ஹோமியோபதி மருந்துகள், பூச்சுகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் சட்டவிதிகளை வகுத்தமைத்து பிரகடனப்படுத்துதல்.
2. நிதியத்தை கட்டியெழுப்புதல் மற்றும் அரச ஹோமியோபதி ஒசுசல்களை தாபித்தல்.

# 10. ஹோமியோபதி மருத்துவ சபையின் செயலாற்றுகை 2013 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரை

10-1 கிளினிக் முகாமைத்துவம் மற்றும் நடாத்திச் செல்லல்.

- 07 மாவட்டங்களில் மருத்துவ சபையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 07 அரசாங்க ஹோமியோபதி மருத்துவ கிளினிக்குகள் நடாத்திச் செல்லல்.

- மருத்துவ சபையின் கண்காணிப்பின் கீழ் நடாத்தப்படுகின்ற இந்த கிளினிக்குகளுக்கு சம்பளங்களும் படிகளும் வழங்கப்பட்டுள்ளன.

- கிளினிக்ககளை நடாத்திச் செல்லுவதற்கு தேவையான அடிப்படைத் தேவைப்பாடுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- இந்த சகல கிளினிக்குகளும் அரசாங்க கட்டடங்களில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கிளினிக்குகளின் வினைத்திறன்

மருத்துவ சபையினால் கண்காணிக்கப்படுகின்ற பின்வரும் 07 கிளினிக்குகளின் ஊடாக 56290 நோயாளிகள் இந்த ஆண்டுக்குள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

| | **கிளினிக்கு** | **நோயாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | தெஹிவளை | 11556 |
| 2. | மொணறாகல | 5680 |
| 3. | பாலமுனை | 7907 |
| 4. | மாத்தளை | 7030 |
| 5. | தோலங்கமுவ | 5130 |
| 6. | குருநாகல் | 9642 |
| 7. | பரகடுவ | 9345 |

## 10-2 இடைக்கால குழு

2013 ஆம் ஆண்டும் ஹோமியோபதி மருத்துவ சபை பணிகள் மாண்புமிகு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இடைக்கால குழுவினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

இதன் உறுப்பினர்கள்.

1. தேசிய மருத்துவத்துறை அமைச்சின் கௌரவ அமைச்சரின் ஆலோசகர் கலாநிதி (திரு) நிவ்டன் பீரிஸ் - தலைவர்

2. கலாநிதி (திரு) நிவ்டன் பீரிஸ். சுதேச மருத்துவத்துறை அமைச்சு - தலைவர்

3. திருமதி பீ. தயாரத்ன மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) சுதேச மருத்துவத்துறை அமைச்சு - உறுப்பினர்

4. பேராசிரியர் (திரு) கே.ஏ.டீ.எஸ். ரணவீர பணிப்பாளர் பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம் - உறுப்பினர்

5. மருத்துவர் (திரு) ஏ.ஜே.எம் முனவ்வர் ஹோமியோபதி மருத்தவமனை - உறுப்பினர்

6. பிரதான கணக்காளர் திரு கே.எஸ். பியசிரி சுதேச மருத்துவத்துறை அமைச்சு - உறுப்பினர்

## இடைக்கால குழுவின் மாற்றங்கள்

பிரதான கணக்காளர் பதவி வெற்றிடமாக இருந்ததால் இதற்காக சுதேச மருத்துவத் துறை அமைச்சின் கணக்காளர் திருமதி டப்லிவ்.டப்லிவ். உதாரா ஜயமாலி அவர்கள் குழு உறுப்பினராக கலந்து கொண்டார்.

இடைக்கால குழுக் கூட்டங்கள்

| | | |
|---|---|---|
| 01. 2013.01.17 | - 15 | (இந்த ஆண்டுக்குள் 07 இடைக்கால குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டன) |
| 02. 2013.02.28 | - 16 | |
| 03. 2013.05.20 | - 17 | |
| 04. 2013.07.09 | - 18 | |
| 05. 2013.08.29 | - 19 | |
| 06. 2013.10.04 | - 20 | |
| 07. 2013.11.26 | - 21 | |

## 10-3 ஹோமியோபதி மருத்துவ சபை ஆளணி மற்றங்களும் புதிய ஆட்சேர்ப்புக்களும்

| | பதவி | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 01. | பதிவாளர் | 01 | |
| 02. | நிருவாக உத்தியோகத்தர் | 01(2013.03.31 சேவைக்காலம் முடிவடைந்து விட்டது) | |
| 03. | மருத்துவ தொழில்சார்பாளர்கள் | 07 | |
| 04. | முகாமைத்துவ உதவியாளர் | 02 | |
| 05. | மருந்து கலவையாளர் | 07 | (மொணறாகல கிளினிக்கில் நிலவிய வெற்றிடத்துக்கு 2013.10.15 திகதி மருந்து கலவையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார்) |
| | **மொத்தம்** | 18 | |

## 10-4 ஆட்சேர்ப்புத் திட்டமும் ஆளணி மாற்றங்களும்

- ஹோமியோபதி மருத்துவ சபை அலுவலகத்திற்கு நாட் சம்பள அடிப்படையில் இரண்டு அமய அலுவலகப் பணியாளர்கள் 2013.02.15. ஆந் திகதி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

- ஹோமியோபதி மருத்துவ சபையின் நிருவாக உத்தியோகத்தராக ஒப்பந்த அடிப்படையில் பணி புரிந்த திரு.பீ.ஏ.பியசேன அவர்களின் சேவை 2013.03.31 ஆந் திகதியுடன் முடிவடைந்தது.

- ஹோமியோபதி மருத்துவ சபை அலுவலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் நியமிப்பதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட என்.பீ.ஜி.ஜயத்திரி பியுமலி பல்லியகுரு, பீ.ஏ. தீபிகா நிரோசா ஹேரத் ஆகிய இருவரும் 2013.06.10. ஆந் திகதி தொடக்கம் பதவியில் நியமிக்கப்பட்டனர்.

- ஹோமியோபதி மருத்துவ சபை ஊடாக நெறிப்படுத்தப்படுகின்ற, மொணறாகல அரசாங்க ஹோமியோபதி மருத்துவ கிளினிக்குக்காக தற்காலிகமாக மருந்து கலவையாளர் பதவியில் நியமிப்பதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட செல்வி எல்.ரசிகா சாந்தனி 2013.10.15. ஆந் திகதி தொடக்கம் பதவியில் நியமிக்கப்பட்டனர்.

## 10-5 தரவுகளும் தற்போதைய தகவல்களும்

2013 ஆண்டு வரை பதிவு செய்யப்பட்டுள்ள மருத்துவர்களின் பெயரப் பட்டியல

| வகுதி | 27-1-a | 27-1-c | 27-2 | 27-5 |
|---|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட மருத்துவர் | 56 | 36 | 49 | 51 |
| பட்டதாரி | 04 | | | |
| டிப்ளோமா | 52 | | | |
| பொது | | 36 | 49 | 51 |

பொழிப்பு

| | பதிவு செய்யப்பட்ட மருத்துவர் | முறையாக பதிவு செய்யப்படாத | 2013 திசெம்பர் வரை பதிவை இற்றைவரைப்படுத்திய | 2013 திசெம்பர் வரை பதிவை இற்றைவரைப்படுத்தாத | மரணித்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| மொத்தம் | 192 | 01 | 99 | 51 | 41 |

## 10 - 6 மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு மருத்துவ தொழில்சார்பாளர்களுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கள்.

- 2013 ஜனவரி தொடக்கம் டிசம்பர் 30 வரை மருந்து இறக்குமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட 20 விண்ணப்பங்களுக்கு 20 அனுமதி வழங்கப்பட்டது.
- அதன் முழுமையான பெறுமதி

| | |
|---|---|
| US $ | 33578.27 |
| INDIAN RS | 208106.00 |
| € | 15.60 |

- 3 புதிய ஹோமியோபதி மருந்துகள் அனுமதிக்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆக்கத்திறன் வாய்ந்த உற்பத்தியை உருவாக்குவதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 10-7 நிதிமன்ற நடவடிக்கைகள்

### உயர் நிதிமன்றம்

கனம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 891/2009 இலக்கத்தைக் கொண்ட வழக்கு விசாரணையில் உள்ளது.

2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் தற்காலிகமாக பதிவு செய்த ஹோமியோபதி மருத்துவர்கள் பொதுவான பட்டியலில் பதிவு செய்து கொள்ளுவதற்காக ஹோமியோபதி இடைக்கால குழுவிற்கு கட்டளை ஒன்றை பிறப்பிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 187/2013 (F/R) வழக்கின் தீர்ப்பு 2013-06-13 ஆந் திகதி வழங்கப்பட்டது.
இதன் மூலம் மனுதாரர்களின் கோரிக்கைகளுக்கு இடமளித்து 06 மாத காலத்துக்குள் உரிய பரீட்சையை நடாத்தி பதிவுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும், அத்துடன் இதற்கான பதிவுகள் முடிவடையவிருந்த 2013-11-30 ஆந் திகதி தொடக்கம் 06 மாதங்கள் முன்னோக்கியதாக அவர்களது தற்காலிக பதிவுக் காலத்தை நீடிப்பதற்கம் கட்டளையிடப்பட்டது.

### மேல்முறையீட்டு நீதிமன்றம

ஹோமியோபதி மருத்துவர்களை பதிவு செய்வதற்கு எதிராக மூன்று மருத்தவர்களளினால்
மாண்புமிகு அமைச்சர், அமைச்சின் செயலாளர், ஹோமியோபதி மருத்துவ சபை, பதிவாளர், இடைக்காலக் குழு மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை எதிராளிகளாக பெயர் குறிப்பிட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு மேலும் விசாரணையில் உள்ளது.

2008 ஆம் ஆண்டு தற்காலிக பட்டியலில் பதிவு செய்யப்பட்ட மூன்ற மருத்துவர்களினால் தற்காலிக மருத்துவர்களை நிரந்தரமாக்குவதற்கான பரீட்சையொன்றை நடாத்துவதற்கு மருத்துவ சபை நியமிக்கப்படும் வரைக்கும் இடைக்காலக் குழுவுக்கு தடை விதிக்கும் தீர்மானம் ஒன்றை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு வருட இறுதி வரையும் தீர்ப்பு வழங்கப்படவில்லை.

### மாவட்ட நீதிமன்றம்

ஹோமியோபதி மருத்துவ சபையின் முன்னால் அலுவலகப் பணியாளர் ஈ.ஆர்.டீ. சேரம் என்பவர் தனது சேவையை முடிவுறுத்தியமைக்கு எதிராக 03 மில்லியன் ரூபா கோரி 13953/M என்னும் இலக்க வழக்கு நீர்கொழும்பு மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்க விசாரணையில் உள்ளது.

# 11. கணக்காய்வு அறிக்கை

முன்னைய ஆண்டைப் போன்றே 2013 ஆண்டும் ஹோமியோபதி மருத்துவ சபையின் நடவடிக்கைகள் ஹோமியோபதி இடைக்காலக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. இதன் நிதி நடவடிக்கைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 2013 ஆண்டின் கணக்கு அறிக்கைகள், வருமானங்கள் மற்றும் செலவிகங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் கணக்காய்வு விசாரணைகள், அவற்றுக்கு வழங்கிய பதில்களுடன் கணக்காய்வாளரின் அறிக்கையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

2013 ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஹோமியோபதி சபையின் 2013-2017 திரட்டிய திட்டமொன்றைத் தயாரித்து அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முன்னைய இரு ஆண்டுகளுக்குள் நிருவாக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலைமைகள் மாற்றமடைந்து இந்த ஆண்டு ஹோமியோபதி இடைகாலக் குழு மருத்துவர்களை மீண்டும் பதிவு செய்ய ஆரம்பித்துள்ளது. இதற்கமைவாக ஐந்து ஹோமியோபதி பட்டதாரிகளுக்கு பதிவுகள் வழங்கப்பட்டன. ஹோமியோபதி சபையின் பௌதீக மற்றும் மனித வளங்களை விருத்தி செய்யும் செயற்பாட்டினை முன்னெடுத்துச் சென்று பதவியணிக்காக நிரந்தர முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு இருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

இடைக்கால குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததால் மட்டுப்படுத்தப்பட்ட வரையறைக்குள் இடைக்கால குழுவுக்கு செயற்படவேண்டி ஏற்பட்டது. இது செயற்பாட்டு திட்டத்தின் சில பகுதிகள் நடைமுறைப்படுத்துவதற்கு நிலவிய பிரதான தடையாக இருந்தமை இதில் குறிப்பிடல் வேண்டும்.

புதிய ஹோமியோபதி சட்டத்தை நிறைவேற்றும் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டதுடன் ஹோமியோபதி சபை மீண்டும் நியமிக்கப்படும். ஹோமியோபதி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தை தடையின்றி அடைந்து கொள்ளுவதற்கான வழியை ஒழுங்கு செய்தல் இதன் எதிர்பார்ப்பாகும்.

கலாநிதி நியூட்டன் ஏ பீரிஸ்
தலைவர்
ஹோமியோபதி இடைக்காலகுழு.

# ஆசிகள்

………… ********** ………

மாண்புமிகு சுதேச மருத்துவத்துறை அமைச்சர்

மாண்புமிகு பிரதி சுதேச மருத்துவத்துறை அமைச்சர்

மருத்துவ சபை உறுப்பினர்கள்

செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர்கள்

ஹோமியோபதி இடைக்கால குழுத்தலைவர்

இடைக்கால குழு உறுப்பினர்கள்

சட்டமா அதிபர் திணைக்களம்

கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்

ஹோமியோபதி மருத்துவ சபை பதிவாளர்

மற்றும்

பதவியணியினர்

……………………… ************* ………………

# ஹோமியோபதி மருத்துவ சபை

## நிதிச் செயலாற்றுகைக் கூற்று

## 2013 திசெம்பர் 31 திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கானவை

| | 2013 | 2012 |
|---|---|---|
| வருவாய் | ரூபா | ரூபா |
| அரச மீண்டுவரும் ஒதுக்கீடு | 5806790 | 5518399 |
| வருடாந்தக் கட்டணங்கள் | 11850 | 2800 |
| வேறு வருவாய்கள் (குறிப்பு 1) | 134789 | 115641 |
| மொத்த வருவாய் | 5953429 | 5636840 |
| செலவினங்கள் | | |
| சம்பளங்களும் ஊதியங்களும் ஊழியர் நன்மைகளும் (குறிப்பு 2) | 4866152 | 4595815 |
| வழங்களும் பயன்பாட்டுப் பொருட்களும் (குறிப்பு 3) | 8354 | 11012 |
| தேய்மானமும் தேய்மான முறையும் | 119310 | 133064 |
| வேறு செலவினங்கள் (குறிப்பு 4) | 868477 | 918105 |
| சட்ட கட்டணங்கள் | 142000 | - |
| நிதிச் செலவினங்கள் (வங்கிக் கட்டணங்கள்) | 8994 | 8149 |
| மொத்த செலவினங்கள் | 6013287 | 5666145 |
| காலப்பகுதிக்கான குறைபாடுகள் | (59858) | (29305) |

இந்த நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பை ஹோமியோபதி இடைக்கால குழு ஏற்றுக் கொள்ளுகின்றது என உறுதிப்படுத்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| ஒப்பம் | ஒப்பம் | ஒப்பம் | ஒப்பம் |
| பதிவாளர் | தலைவர் | குழு உறுப்பினர் | தயாரித்தது |
| ஹோமியோபதி | ஹோமியோபதி | எம்.டி.ஆர்.சீ.சித்ரலதா | கே.எஸ். பியசிரி |
| மருத்துவ சபை | மருத்துவ சபை | | |

| | | |
|---|---|---|
| குறிப்பு 1 ஏனைய அறவீடுகள் | | |
| நானாவித வருமானங்கள் | 22370 | 13775 |
| வங்கி வட்டி | 112419 | 101866 |
| | 134789 | 115641 |
| குறிப்பு 2- சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் ஊழியர் நன்மைகள் | | |
| ஆளணி சம்பளங்களும் படிகளும் | 4035064 | 3844620 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 722668 | 455606 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 108400 | 113901 |
| ஊழியர் நட்டஈடு | - | 181688 |
| | 4866152 | 4595815 |
| குறிப்பு 3- வழங்கள்களும் பயன்பாட்டு பொருட்களும் | | |
| காகிதாதிகள் செலவு | 7134 | |
| உபசரிப்பு செலவு | 1220 | 11012 |
| | | |
| குறிப்பு 4- ஏனைய செலவினங்கள் | | |
| நானாவித செலவுகள் | 24421 | 134487 |
| போக்குவரத்து செலவுகள் | 38586 | 48111 |
| மருந்தக செலவுகள் | 152626 | 164199 |
| தபால் கட்டணங்கள் | 6000 | 11060 |
| மருத்துவ சபை கூட்டங்களின் கட்டணங்கள் | 116000 | 136000 |
| கணக்காய்வு கட்டணங்கள் | 40000 | 40000 |
| நீர்க் கட்டணங்கள் | 43176 | 13599 |
| மின்சார கட்டணங்கள் | 13419 | 6357 |
| தொலைபேசி கட்டணங்கள் | 49196 | 45042 |
| அச்சுக் கட்டணங்கள் | 140345 | 35000 |
| அறிவித்தல் கட்டணங்கள் | 89152 | 125664 |
| அலுவலக உபகரண திருத்தங்கள் | 101523 | 113154 |
| | 33727 | 45432 |
| தெயட்ட கிருள செலவுகள் | 20306 | |
| | 868477 | 918105 |

குறிப்பு (5) – கணக்குகளைச் சமர்ப்பித்தல்

இலங்கை அரச பிரிவு கணக்கியல்

தரம் (2009) “ 01” க்கு அமைவாகவாகும்.அவ்வாறே “ இயற்கையின் அடிப்படை மீதான வகைப்படுத்தலை விளக்குதல்” என்ற வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஹோமியோபதி மருத்துவ சபையின் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய நிதிப்பாய்ச்சல் கூற்று.

| | 2013 |
|---|---|
| | ரூபா |
| தொழிற்படு செயற்பாட்டின் நிதிப் பாய்ச்சல்கள் | |
| வரவு | |
| அரசாங்கத்திலிருந்து கிடைத்த மீண்டுவரும் ஒதுக்கீடுகள் | 5806790 |
| வங்கி வட்டி | 112419 |
| ஏனைய வரவுகள் (குறிப்பு 1) | 34220 |
| செலவு | |
| ஆளணி செலவு (குறிப்பு 2) | (4828813) |
| வங்கி வட்டி(வங்கி கட்டணங்கள்) | (8994) |
| ஏனைய கொடுப்பனவுகள்( குறிப்பு 3) | (977977) |
| தொழிற்படு செயற்பாட்டின் தேறிய நிதிப் பாய்ச்சல்கள் | 137645 |
| முதலீடு செயற்பாட்டின் நிதிப் பாய்ச்சல்கள் | |
| அரசாங்கத்திலிருந்து கிடைத்த மூலதன ஒதுக்கீடுகள் | 973273 |
| பொறித் தொகுதிகளும் உபகரணங்களும் கொள்வனவு செய்தல் | (973273) |
| முதலீடு செயற்பாட்டின் தேறிய நிதிப் பாய்ச்சல்கள் | |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு (குறிப்பு 5) | 137645 |
| காலப்பகுதியில் ஆரம்பமான நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் (குறிப்பு 6) | 1690450 |
| காலப்பகுதி முடிவின் நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் (குறிப்பு 7) | 1828095 |

| | | | |
|---|---|---|---|
| ஒப்பம் | ஒப்பம் | ஒப்பம் | ஒப்பம் |
| பதிவாளர் | தலைவர் | குழு உறுப்பினர் | தயாரித்தது |
| ஹோமியோபதி | ஹோமியோபதி | எம்.டி.ஆர்.சீ.சித்ரலதா | கே.எஸ். பியசிரி |
| மருத்துவ சபை | மருத்துவ சபை | | |

இந்த நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பை ஹோமியோபதி இடைக்கால குழு ஏற்றுக் கொள்ளுகின்றது என உறுதிப்படுத்துகின்றோம்.

| | |
|---|---|
| குறிப்பு 1 ஏனைய பெறுகைகள் | |
| நானாவித வருமானங்கள் | 22370 |
| வருடாந்தக் கட்டணங்கள் | 11850 |
| | 34220 |
| குறிப்பு 2- ஊழியர் செலவினங்கள் | |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 705118 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 105767 |
| ஆளணி சம்பளங்களும் படிகளும் | 4017928 |
| | 4828813 |
| குறிப்பு 3- ஏனைய கொடுப்பனவுகள் | |
| போக்குவரத்து செலவுகள் | 36533 |
| மருந்தக செலவுகள் | 150826 |
| காகிதாதிகள் செலவுகள் | 7134 |
| மருத்துவ சபை கூட்டங்கள் | 96000 |
| அறிவித்தல் கட்டணங்கள் | 89152 |
| மின்சார கட்டணங்கள் | 13208 |
| தொலைபேசி கட்டணங்கள் | 53738 |
| அச்சுக் கட்டணங்கள் | 185345 |
| அலுவலக உபகரண திருத்தங்கள் | 84779 |
| நீர்க் கட்டணங்கள் | 33588 |
| உபசரிப்பு செலவுகள் | 1220 |
| காசி செலவுகள் | 33727 |
| நானாவித செலவுகள் | 24421 |
| சட்ட கட்டணங்கள் | 142000 |
| தபால் செலவுகள் | 6000 |
| தெயட்ட கிருள செலவுகள் | 20306 |
| | 977977 |
| குறிப்பு (4) பொறித் தொகுதியும் உபகரணங்களை கொள்வனவு செய்தலும் | |
| துவிச்சக்கர வண்டி கொள்வனவு | 10845 |
| நீர்த் தாங்கி கொள்வனவு | 8600 |
| கட்டட புனரமைப்பு (திருத்த) செலவுகள் | 953828 |
| | 973273 |
| குறிப்பு (5) நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு | |
| வருட இறுதியில் நிதி மீதி | 1828095 |
| வருட ஆரம்பத்தின் நிதி மீதி | (1690450) |
| தொழிற்பாட்டு செயற்பாட்டின் தேறிய நிதிப்பாய்ச்சல் | 137645 |

| | |
|---|---|
| குறிப்பு (6) காலப்பகுதியில் ஆரம்பமான நிதியம் நிதிக்கு சமமானவைகளும் | |
| கொமர்ஷல் வங்கி | 1301742 |
| இலங்கை வங்கி | 388708 |
| | 1690450 |
| குறிப்பு (7) காலப்பகுதி முடிவின் நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் | |
| கொமர்ஷல் வங்கி | 1405167 |
| இலங்கை வங்கி | 422928 |
| குறிப்பு (8) | |
| பொதுவான செயற்பாடுகளின்தேரிய மிகை.ஃ.குறைபாடு.ஃ.தொழிற்பாட்டு செயற்பாடுகளின் தேறிய நிதிப் பாய்ச்சலுடன் ஒப்பிடுதல் | |

**குறிப்பு (9) செலுத்தப்பட வேண்டிய செலவுகளின் அதிகரிப்பு**

| | 2012 மற்றும் 2013 ஆண்டின் ஒப்பீடு | | |
|---|---|---|---|
| | வருடாந்த குறைவுகள் | வருடாந்த அதிகரிப்புகள் | தேறிய மாற்றங்கள் (+) / (-) |
| - செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் | - | 17550 | |
| - செலுத்தப்பட வேண்டிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | - | 2633 | |
| -செலுத்தப்பட வேண்டிய மருந்தக கட்டணங்கள் | - | 1800 | |
| - செலுத்தப்பட வேண்டிய மருத்துவ சபை கூட்டங்களின் கட்டணங்கள் | - | 20000 | |
| - செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வு கட்டணங்கள் | - | 45616 | |
| - செலுத்தப்பட வேண்டிய தொலைபேசி கட்டணங்கள் | (3342) | - | |
| - செலுத்தப்பட வேண்டிய மின்சார கட்டணங்கள் | - | 513 | |
| - செலுத்தப்பட வேண்டிய போக்குவரத்து கட்டணங்கள் | - | 2053 | |
| - செலுத்தப்பட வேண்டிய நீர்க் கட்டணங்கள் | - | 9588 | |
| - செலுத்தப்பட வேண்டிய ஆளணி சம்பளங்களும் படிகளும் | - | 17155 | |
| - செலுத்தப்பட வேண்டிய அலுவலக உபகரண திருத்தங்கள் | - | 16744 | |
| | **(3342)** | **133652** | **130310** |

# ஹோமியோபதி மருத்துவ சபை

## 2013 திசெம்பர் 31 திகதியன்றுக்கான நிதிக்கூற்று

| | 2013 | 2012 |
|---|---|---|
| சொத்துக்கள் | ரூபா | ரூபா |
| அசையும் சொத்து | | |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் (குறிப்பு 1) | 1828095 | 1690450 |
| | 1828095 | 1690450 |
| ஆசையா சொத்துக்கள் | | |
| பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் (குறிப்பு 2) | 874958 | 974822 |
| கட்டட புனரமைப்பு செலவினம் | 953828 | |
| | 1828786 | 974822 |
| மொத்த சொத்துக்கள் | 3656881 | 2665272 |
| வரவுகள் | | |
| அசையும் வரவுகள் | | |
| செலுத்தப்பட வேண்டியவைகள் (குறிப்பு 3) | 235284 | 104974 |
| ஆசையா வரவுகள் | | |
| மொத்த வரவுகள் | 235284 | 104974 |
| தேறிய சொத்துக்கள் | 3656881 | 2665272 |
| தேறிய சொத்துக்கள்/அறிக்கை | | |
| மூலதனம் | 2562144 | 2562144 |
| அரச மூலதன ஒதுக்கீடுகள் | 973273 | - |
| திரண்ட குறைபாடுகள் | (89163) | (29305) |
| முன்னைய ஆண்டின் சீராக்கல் கணக்கு | (24657) | 27459 |
| தேறிய சொத்துக்கள்/அறிக்கை | 3421597 | 2560298 |

இந்த நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பை ஹோமியோபதி இடைக்கால குழு ஏற்றுக் கொள்ளுகின்றது என உறுதிப்படுத்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| ஒப்பம் | ஒப்பம் | ஒப்பம் | ஒப்பம் |
| பதிவாளர் | தலைவர் | குழு உறுப்பினர் | தயாரித்தது |
| ஹோமியோபதி | ஹோமியோபதி | எம்.டி.ஆர்.சீ.சித்ரலதா | கே.எஸ். பியசிரி |
| மருத்துவ சபை | மருத்துவ சபை | | |

| | | |
|---|---|---|
| (1) குறிப்பு- நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள்<br>கொமர்ஷல் வங்கி<br>இலங்கை வங்கி | 1405167<br>422928 | 1301742<br>388708 |
| | 1828095 | 1690450 |
| (2) குறிப்பு- பொறித் தொகுதியும் உபகரணங்களும்<br>பொறித் தொகுதியும் உபகரணங்களும்<br>(-) திரட்டிய தேய்மானங்கள் | 1725992<br>(851034) | 1706547<br>(731725) |
| தேறிய பெறுமதி | 874958 | 974822 |

| | | |
|---|---|---|
| (3) குறிப்பு- செலுத்தப்பட வேண்டியவைகள் | | |
| செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் | 17550 | |
| செலுத்தப்பட வேண்டிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 2633 | |
| செலுத்தப்பட வேண்டிய மருந்தக கட்டணங்கள் | 16200 | 14400 |
| செலுத்தப்பட வேண்டிய மருத்துவ சபை கூட்டங்களின் கட்டணங்கள் | 20000 | |
| செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வு கட்டணங்கள் | 85616 | 40000 |
| செலுத்தப்பட வேண்டிய தொலைபேசி கட்டணங்கள் | 3937 | 7279 |
| செலுத்தப்பட வேண்டிய மின்சார கட்டணங்கள் | 1240 | 727 |
| செலுத்தப்பட வேண்டிய போக்குவரத்து கட்டணங்கள் | 2053 | |
| செலுத்தப்பட வேண்டிய நீர்க் கட்டணங்கள் | 10156 | 568 |
| செலுத்தப்பட வேண்டிய ஆளணி சம்பளங்களும் படிகளும் | 59155 | |
| செலுத்தப்பட வேண்டிய அலுவலக உபகரண திருத்தங்கள் | 16744 | 42000 |
| | 235284 | 104974 |

(4) குறிப்பு கணக்குகளை சமர்ப்பித்தல்
இலங்கை அரச பிரிவு கணக்கியல் தரம் (2009) “ 01” க்கு அமைவாக

(5) குறிப்பு –தேய்மான முறை

- சுகல நிலையான சொத்துக்களினதும் பெறுமானத் தேய்வ மீதி முறை அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது
- தேய்மான நூற்றுவீதம் 12%
- சொத்துக்கள் ஆண்டின் எந்த தினத்தில் கொள்வனவு செய்யப்பட்டாலும் இது உரிய முழுமையான ஆண்டுக்கும் தேய்மானம் கணக்கிடப்படும்
- சொத்துக்கள் ஆண்டின் எந்த தினத்தில் அகற்றப்பட்டாலும் இது உரிய முழுமையான ஆண்டுக்கும் தேய்மானம் கணக்கிடப்படும்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. எச்எம்/பீ/எச்எம்சீ/1/13/ ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2014 திசெம்பர் 31

தலைவர்
ஹோமியோபதி வைத்திய சபை

**ஹோமியோபதி வைத்திய சபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஹோமியோபதி வைத்திய சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2014 ஒக்டோபர் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம்

உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹோமியோபதி வைத்திய சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய மருத்துவ சபைக் கூட்டக் கட்டணம், பதவியணிக் கொடுப்பனவு மற்றும் சம்பளம் மற்றும் கணக்காய்வுக் கட்டணத்திற்காக ரூபா 66,859 தொகை குறைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மிகைக் கட்டண வடிவிலான செலவினத் தொகையான ரூபா 27,020 மூலதனச் செலவினமாகக் கருதி கட்டிடம் மற்றும் புனரமைப்புச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்காக வைத்திய சபையின் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 395(இ) | ஒவ்வொரு மாத இறுதியின் போதும் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலை தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகளிலிருந்தான செயற்பாட்டு விளைவு ரூபா 59,858 தொகையான பற்றாக்குறை காணப்பட்டது. அதற்கு மாறாக முன்னைய ஆண்டிற்காக ரூபா

29,305 தொகையான பற்றாக்குறை காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 30,553 தொகையான பின்னடைவு காணப்பட்டது.

### 3.2 நிறுவகத்திற்கு எதிரான சட்டரீதியான நடவடிக்கைகள்

வைத்திய சபை கலைக்கப்பட்டு, பதவிநீக்கம் செய்யப்பட்டு, சேவை முடிவிற்கு கொண்டுவரப்பட்டிருந்தமையால் மூன்று வெளிவாரி நிறுவனங்களினால் (குழுக்கள்) மொத்தமாக ரூபா 3,200,000 இழப்பீடு கோரி சபைக்கு எதிராக நீதிமன்றங்களில் முன்று வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சட்டபூர்வமான வைத்திய சபையொன்று இன்மையின் காரணமாக 1970 இன் 07 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு மீளாய்வாண்டிலும் முடியாது போயிருந்தது.

i. ஹோமியோபதி வைத்திய முறைக்கான தொடர்புடைய ஆரய்ச்சிகள் மற்றும் கற்கைகளை வலுப்படுத்தல்.

ii. ஹோமியோபதி மருந்து உற்பத்தி, இறக்குமதி, விற்பனை மற்றும் விநியோகத்தலிற்காக நியதிச்சட்டங்களை இயற்றுதல்.

iii. ஹோமியோபதி வைத்தியக் கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டில் கட்டிடமொன்றை நிர்மாணித்து 2009 ஆம் ஆண்டில் தளபாடங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் வைத்தியக் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான சட்டரீதியான கட்டமைப்பொன்றைத் தயாரித்து குறித்த கருமங்களை நிறைவேற்றும் நடவடிக்கை

மேற்கொள்ளப்படுவதற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாட்டில் ஏழு பிரதேசங்களில் நடாத்திவரப்படுகின்ற ஏழு மருந்தகங்களில், நோயாளர்களின் வருகை பரகடுவ சிகிச்சை நிலையத்தில் 8 சதவீதத்தினாலும் மொனறாகலை சிகிச்சை நிலையத்தில் 13 சதவீதத்தினாலும் குருணாகல் சிகிச்சை நிலையத்தில் 9 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்திருந்தன.

(இ) மருத்துவர்களைப் பதிவுசெய்தல்

(i) 2011 சனவரி 31 ஆந் திகதியளவில் வைத்திய சபை கலைக்கப்பட்டிருந்ததுடன் 191 மருத்துவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் துணைக் கட்டுப்பாட்டுக் குழுவின் பரிந்துரைப்பில் மீள ஒரு தடவை 05 மருத்துவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதிவுடன் தொடர்புபட்ட அதிகாரச்சட்டத்தின் பிரிவு | விபரம் | பதிவு செய்யப்பட்டிருந்த மருத்துவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | 1970 இன் 07 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டம் | | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
| I. | 27(1) (அ) | ஹோமியோபதி மருத்துவம் தொடர்பில் நான்கு ஆண்டுகளிற்கு குறையாத பாடநெறி ஒன்றை பின்பற்றியிருத்தல் | 54 | 54 | 54 |
| II. | 27(1)(ஆ) | இலங்கை அல்லது வெளிநாட்டில் | - | - | 5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹோமியோபதி நிறுவகம் ஒன்றினால் வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழ் அல்லது பட்டப் படிப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் | | | |
| III. | 27(1)(இ) | 10 ஆண்டுகளிற்கு குறையாமல் ஹோமியோபதி மருத்துவத் தொழிலில் ஈடுபட்டுள்ள சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவர்கள் | 35 | 35 | 35 |
| IV. | | 3 ஆண்டுகளிற்கு குறையாமல் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் சபையால் மேற்கொள்ளப்பட்ட எழுத்து மூலப் பரீட்சைகளில் தோற்றி வசதிகளைப் பெற்ற மருத்துவர்கள் | 50 | 50 | 50 |
| V. | 27(5) | தற்காலிக பட்டியலில் பெயர் உள்ளடக்கப்பட்டிருந்த மருத்துவர்களிற்கு எழுத்துமூலப் பரீட்சையின் பின்னர் நிரந்தரப் பதிவினை வழங்குதல். | 52 | 52 | 52 |
| | | | ------ | ----- | ------ |
| | | மொத்தம் | 191 | 191 | 196 |
| | | | ==== | === | ==== |

2013 திசெம்பர் 31 வரையிலும் மேற்குறித்த வகையில் 196 பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களில் 38 பேர் காலமாகியிருந்தனர்.

ii. வெளிநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹோமியோபதி நிறுவகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டப் படிப்புச் சான்றிதழ் ஒன்றின் அடிப்படையில் மருத்துவப் பதிவு மேற்கொள்ளப்படுவது இதற்கு முன்னரும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது இந்தியப்

பட்டப்படிப்புச் சான்றிதழில் ஐந்து வைத்தியர்களின் பதிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

2012 சனவரி 05 ஆந் திகதி இடைக்கால சபைக் கூட்டத்தில் ஏழு சிகிச்சை நிலையங்களிற்கான பொதுவான பணிப்புரை வழிகாட்டலொன்றை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 விளைவற்ற சொத்துக்கள்

ஹோமியோபதி வைத்தியக் கல்லூரிக்காக 2009 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,199,254 பெறுமதியான நிலையான சொத்துக்களும், அமைச்சின் கட்டிடங்களும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

5. கணக்களிப்பொறுப்பு மற்றும் சமர்ப்பித்தலும்

5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

ஹோமியோபதி வைத்திய சபையின் 2013 ஆம் ஆண்டில் துணைக் கட்டுப்பாட்டுக் குழுவின் கீழ் செயற்படுத்தப்பட்டதுடன் சபையின் சகல செலவினங்களும் உள்நாட்டு வைத்திய அமைச்சால் உரிய செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட சகல செலவினங்களினதும் கூட்டுத்தொகைக்குச் சமனான தொகை வைத்திய சபைக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகளாகக் கருதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதிகள் உரிய நிதியாண்டு

ஆரம்பிக்கப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் உரிய அமைச்சு, திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நாளதுவரையாக்கபட்ட 2013 – 2017 கூட்டிணைந்த திட்டம் 2013 யூலை மாதமே பூர்த்தியடைந்திருந்தது. இவ்வாறே மேற்குறித்தவாறு உரிய நிறுவகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை எய்தும் நோக்கம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

(அ) ஹோமியோபதி வைத்திய முறைமைக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பொது மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்காக 15 நடமாடும் மருந்தகங்கள் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 07 மருந்தகங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

சிகிச்சை பெற்ற மற்றும் பெற்றிராத நோயாளிகளுக்கிடையே நம்பிக்கையை வலுப்படுத்துவதற்காக 05 கலந்துரையாடல்களும் கருத்தரங்குகளும் 05 பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களும் ஒழுங்கமைக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மருத்துவர்களுக்கிடையே நல்லிணக்கமும் ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துவதற்காக 05 கலந்துரையாடல்களும் கருத்தரங்குகளும் ஒழுங்கமைக்கப்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் கட்டளையைச் செயற்படுத்தி ஹோமியோபதி வைத்தியசபையை உறுதிப்படுத்துவதற்காக சட்டங்கள், விதிகளுக்காக பாராளுமன்றத்தினதும் உரிய அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு, வர்த்தமானியில் வெளியிடப்படுவது

நோக்கான போதிலும் அந் நோக்கம் 2013 திசெம்பர் 31 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹோமியோபதி மக்கள் சுகாதார சேவையை மீளமைப்பதை நோக்காகக் கொண்ட போதிலும் இதனையும் மேற்கொள்ளப்படுவதற்கு தவறியிருந்தது.

(ஈ) ஹோமியோபதி வைத்திய மருத்துவர்களை உருவாக்குவதற்கும் பூரணமான மருத்துவர்களை உருவாக்கி அவர்களது அறிவையும் திறமை விருத்திசெய்வதற்காக துணைச் சட்ட ஏற்பாடு, ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஹோமியோபதி மருத்துவ கல்லூரியை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந் நோக்கத்தையும் எய்துவதற்கு முடியாதிருந்தது.

(உ) ஹோமியோபதி மருந்துப் பொருள் மற்றும் உற்பத்தி தொடர்பான சந்தையின் மிகைத்த தன்மையை உறுதிப்படுத்துவதற்காக துணைச்சட்டங்களை வழங்கி ஹோமியோபதி மருந்துக் களஞ்சியம் மற்றும் மருந்தகம் ஸ்தாபிக்கப்படுவதற்காக நிதியத்தைக் கட்டியெழுப்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்களின் படி பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டின் போது மருத்துவ சபை கூட்டக் கட்டணமான ரூபா 116,000 தொகையும், அச்சீட்டுக் கட்டணத் தொகையான ரூபா 140,345 தொகையும், விளம்பரக் கட்டணமான ரூபா 89,152 தொகையும், கணக்காய்வுக் கட்டணமான ரூபா 40,000 தொகையும், அலுவலக உபகரணங்களைப் பழுதுபார்த்தல் செலவினத் தொகையான ரூபா 101,523 தொகையும், சட்டக் கட்டணமான ரூபா 142,000 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் அவ் விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீட்டுச் செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கு இடையில் 02 விடயங்களில் 100 சதவீதமும், ஒரு விடயத்தில் 81 சதவீதமுமான முரண் நிலவியது.

## 5.5 ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 பொது முயற்சிகள் கணக்குக் குழுவின் பணிப்புரைகளை நிறைவேற்றாமை

2010 செப்தெம்பர் 15 ஆந் திகதிய பொது முயற்சிகள் கணக்குக் குழுவின் கூட்டக்குறிப்பின் பிரகாரம், நிகழ்காலத்திற்குப் பொருந்தும் வகையில் சபையின் பிரமாணங்கள் நாளதுவரையாக்கப்படுதல் வேண்டுமென பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதிலும், தற்போது மருத்துவ சபை நியமிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அப் பிரமாணங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பதிவேடு பேணப்படல்

(ஆ) கணக்கீடு

ஒப்பம் : டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

*Ms/v*